ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2251/63 - 2021 ඔක්තෝබර් මස 29 වැනි සිකුරාදා - 2021.10.29
*2251/63 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 24/51* (ix)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 122 ஆம் பிரிவுடனும், 122அ என்னும் பிரிவுடனும்* VII*அ என்னும் பாகத்துடனும் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.*

**பவித்திரா வன்னிஆராச்சி,**
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
*2021, ஒற்றோபர் 25.*

**ஒழுங்கு விதிகள்**

*2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 2 ஆந் திகதிய 1939/ 4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மோட்டார் வாகன (சாரதிப் பாடசாலைகளும், சாரதிப் போதனாசிரியர்களும் மற்றும் உதவிச் சாரதிப் போதனாசிரியர்களும்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-*

*(1) 8 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக :-*

*"8. ஆளொருவர் சாரதிப் பாடசாலை ஒன்றில் பயிற்சியைப் பூர்த்திசெய்துள்ளவிடத்து, பயிற்சியானது வெற்றிகரமான முறையில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது என்ற பொருள்பட அத்தகைய ஆளுக்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான படிவத்தில் சான்றிதழ் ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.*

1A - PG 5588 — 510 (2021/10)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) 9 ஆம் ஒழுங்குவிதியின் 2 ஆம் விடயத்தினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

| | | | |
|---|---|---|---|
| உரிமம்பெற்ற சாரதிப் போதனாசிரியர்கள் | குறைந்தபட்சம் ஒரு சாரதிப் போதனாசிரியர் | குறைந்தபட்சம் ஒரு சாரதிப் போதனாசிரியர் | உரிமம்பெற்ற சாரதிப் போதனாசிரியர்களின் மூன்று வகுப்புகளில் எவையேனும் ஒன்றிலிருந்து ''ஆ'', ''ஆ1'' மற்றும் “அ” ஆக வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட சாரதி உரிம வகுப்புகளுக்கான சோதனைக்கு அதிகாரமளிக்கப்பட்ட குறைந்தபட்சம் ஒரு சாரதிப் போதனாசிரியர் |
| (அ) வகுப்பு “அ” உரிமம் பெற்ற சாரதிப் போதனாசிரியர்கள் | குறைந்தபட்சம் ஒரு சாரதிப் போதனாசிரியர் | குறைந்தபட்சம் ஒரு சாரதிப் போதனாசிரியர் | |
| (ஆ) வகுப்பு “ஆ” உரிமம் பெற்ற சாரதிப் போதனாசிரியர்கள்<br>(இ) வகுப்பு “இ” உரிமம் பெற்ற சாரதிப் போதனாசிரியர்கள் | ''ஆ'', ''ஆ1'' மற்றும் “அ” ஆக வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட சாரதி உரிம வகுப்புகளுக்கான போதனாசிரியர் ஒருவராக இருப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட குறைந்தபட்சம் ஒரு சாரதிப் போதனாசிரியர் | ''ஆ'', ''ஆ1'' மற்றும் “அ” ஆக வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட சாரதி உரிம வகுப்புகளுக்கான போதனாசிரியர் ஒருவராக இருப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட குறைந்தபட்சம் ஒரு சாரதிப் போதனாசிரியர் | |

(3) 14 ஆம் ஒழுங்குவிதியின் (இ) என்னும் பந்தியின் (iii) மற்றும் (iv) என்னும் விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

“(iii) சாரதிப் போதனாசிரியர்
வகுப்பு “இ” வகுப்பு “ஆ”, “ஆ1” மற்றும் “அ” என்றவாறான வகுப்பு “இ” க்கான உரிமம் ;

ஆயினும் விண்ணப்பத் திகதிக்கு முன்னர் ஆகக்குறைந்தது ஐந்து வருடங்களில் பெறப்பட்ட செல்லுபடியாகும் சாரதி உரிமம் ஒன்றைக் கொண்டுள்ள விண்ணப்பதாரி ஒருவர் “ஆ”, “ஆ1” அல்லது “அ” என்றவாறு வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சாரதி உரிம வகுப்புகளில் அவர் எவற்றுக்கான தகைமைகளைக் கொண்டுள்ளாரோ அவற்றுக்கான உதவிப் போதனாசிரியராக இருப்பதற்கு அத்தகைய ஆளை அதிகாரமளிக்கின்ற வகுப்பு “இ” போதனாசிரியரது உரிமம் ஒன்று வழங்கப்படலாம்.

“(iv) உதவிச் சாரதி போதனாசிரியர்
“ஆ” வகுப்பு “ஆ1” மற்றும் “அ” என்றவாறான “இ” என்ற வகுப்புகளுக்கான சாரதி உரிமம் ;

ஆயினும் விண்ணப்பத் திகதிக்கு முன்னர் ஆகக்குறைந்தது ஐந்து வருடங்களில் பெறப்பட்ட செல்லுபடியாகும் சாரதி உரிமம் ஒன்றைக் கொண்டுள்ள விண்ணப்பதாரி ஒருவர் “ஆ”, “ஆ1” மற்றும் “அ” என்றவாறு வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சாரதி உரிம வகுப்புகளில் அவர் எவற்றுக்கான தகைமைகளைக் கொண்டுள்ளாரோ அவற்றுக்கான போதனாசிரியராக இருப்பதற்கு அத்தகைய ஆளை அதிகாரமளிக்கின்ற வகுப்பு “இ” போதனாசிரியரது உரிமம் ஒன்று வழங்கப்படலாம்.

(4) 16 ஆம் ஒழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

“(அ) சாரதிப் போதனாசிரியரது உரிமம் ஒன்றுக்காக விண்ணப்பிக்கின்ற எவரேனும் ஆள்-

(i) இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகளைப் பெற்று கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்துள்ள குறைந்தபட்ச தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அல்லது

(ii) மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட என்வீகியூ மட்டம் III சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அல்லது

(iii) விண்ணப்பத் திகதிக்கு முன்னர் ஐந்து வருடங்களுக்கு உதவிச் சாரதி போதனாசிரியராக அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ; ”.

11-259

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.